# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): ஜனவரி - 2017

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **மார்ச் 14, 2017**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் 2017 ஜனவரி மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்தியின் மாதாந்தச் சுட்டெண்ணைக் வெளியிட்டுள்ளது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது (IIP) மிக முக்கியமான குறிப்பிட்ட பொருளாதார குறிகாட்டியாக உள்ளதுடன் அதன் முக்கிய நோக்கம் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிக்கொணர்வதாகும். இது பொருளாதார அபிவிருத்தியின் திருப்புமுனைகளை ஆரம்ப கட்டத்தில் அடையாளங்காண பயன்படுகின்றது. DCS 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து மாதாந்த IIP குறிகாட்டியை வெளியிடுவதுடன் இந்நாளிலிருந்து 42 நாட்கள் இடைவெளியில் மாதாந்த அடிப்படையில் இச்சுட்டி வெளியிடப்படுவதாக திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சத்தரசிங்க, இச்சுட்டெண்ணை வெளியிடுதல் சம்பந்தமான அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்(IIP) தொகுக்கப்பட்டது.

வெளியிடப்பட்ட IIP பெறுமதிகளின் படி, 2016ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஜனவரி மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 0.7% ஆல் அதிகரித்துள்ளது.

உற்பத்திக் கைத்தொழில்களில், 2016ஆம் ஆண்டு ஜனவரி மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஜனவரி மாத உற்பத்தியில், ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருட்கள் உற்பத்தி (25.9%), மின்னுபகரணம் (13.4%) மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் (8.4%) என்பன குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றது. ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருட்கள் உற்பத்திச் சுட்டெண் அதிகரிப்பானது நிர்மாணக் கைத்தொழிலின் வளர்ச்சியின் காரணமாக இருக்க முடியும். ஜனவரியில் உணவு உற்பத்தியானது 1.6%ஆல் அதிகரித்துள்ளது. 2016இன் ஜனவரி மாத உற்பத்திக் சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாத உற்பத்திச் சுட்டெண்ணில், கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (36.0%), இரசாயனம் மற்றும் இரசாயனப் பொருள் உற்பத்தி (19.3%) மற்றும் கடதாசியும் கடதாசி உற்பத்திகளும் (4.7%), ஆகிய வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம், வருடம் | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஜனவரி - 2016 | **103.1** |
| ஜனவரி - 2017 | **103.8** |
| மாறுபாடு(%) | **0.7** |

2017 ஜனவரியின் மாதாந்த, கைத்தொழிற் சுட்டெண் பற்றிய மேலதிக விபரங்களுக்கு www.statistics.gov.lk/Industries இணையத்தை பார்க்குமாறு திணைக்ககளம் தெரிவித்துள்ளது.